**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – புதிய அறிவிப்புகள் 2013–14 மாநில அரசால் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிட மாணவ/ மாணவியருக்கு வழங்கப்படும் அனைத்து கல்வி உதவித் தொகை திட்டங்களின் சலுகைகளை பெறுவதற்கு பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பை ரூ.1.00,000/– லிருந்து ரூ.2,00,000/– மாக உயர்த்தி ஆணை வெளியிடப்படுகின்றது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந 3 ) துறை

அரசாணை (நிலை) எண். 41

நாள்: 03.07.2013
விஜய வருடம், ஆனி 19,
திருவள்ளுவர் ஆண்டு 2044

படிக்கப்பட்டது:

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.78, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 03.08.2012.
2. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடிதம் எண். அ1/22367/2012 நாள் 22.5.2013.

– – –

ஆணை:–

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் 9.5.2013 அன்று சட்டப்பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பின்வரும் புதிய அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

> “மாநில அரசால் செயல்படுத்தப்படும் மாநில போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டம், விடுதிகளில் மாணாக்கர் சேர்க்கை, குடிமைப் பணி பயிற்சி மையத்தில் சேர்க்கை, உயர் கல்வி சிறப்பு உதவித் தொகை உட்பட, அனைத்து திட்டங்களுக்கும் தற்போது பெற்றோர் அல்லது பாதுகாலரின் ஆண்டு வருமான வரம்பு ஒரு லட்சம் ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த வரம்பு இரண்டு லட்சம் ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் கூடுதலாக 30,000 மாணாக்கர்கள் பயன்பெறுவர்”

2. மாண்புமிகு முதலமைச்சரின் புதிய அறிவிப்பினை உடனடியாக நிறைவேற்றும் விதமாக 2013–14ம் கல்வியாண்டு முதல், மாநில அரசால் செயல்படுத்தப்படும் மாநில போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டம், விடுதிகளில் மாணாக்கர் சேர்க்கை, குடிமைப் பணி பயிற்சி மையத்தில் சேர்க்கை, உயர் கல்வி சிறப்பு உதவித் தொகை உட்பட, அனைத்து திட்டங்களுக்கும் தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள பெற்றோர் அல்லது பாதுகாலரின் ஆண்டு வருமான வரம்பான ஒரு லட்சம் ரூபாய் என்பதனை, இரண்டு லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்க அரசாணை வெளியிடுமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்கள் அரசைக் கோரியுள்ளார்.

3. பார்வை 1ல் படிக்கப்பட்ட அரசாணையில், 2012-13ஆம் கல்வி ஆண்டு முதல், மாநில அரசின் மெட்ரிக் படிப்பிற்கு மேல்படிப்பிற்கான கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவ/ மாணவியர்கள் கல்வி உதவித் தொகை பெறுவதற்கான பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமான உச்ச வரம்பினை ரூ.1,00,000/-லிருந்து ரூ.2,00,000/- மாக உயர்த்தி அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலனை செய்து, ஏற்கெனவே மாநில போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் பயன்பெற பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.2.00 இலட்சமாக உயர்த்தி ஆணையிட்டதை போலவே, ஏனைய கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டங்களான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் மாணாக்கர் சேர்க்கை, குடிமைப் பணி பயிற்சி மையத்தில் சேர்க்கை, உயர் கல்வி சிறப்பு உதவித் தொகை உட்பட, கல்வி மேம்பாடு தொடர்பான அனைத்து திட்டங்களுக்கும், தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள பெற்றோர் அல்லது பாதுகாலரின் ஆண்டு வருமான வரம்பான ரூ.1.00 இலட்சம் (ரூபாய் ஒரு லட்சம்) என்பதனை, ரூ.2.00 இலட்சமாக (ரூபாய் இரண்டு லட்சம்) உயர்த்தி அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். 34856 /ஆதி (ம) பந/13 நாள்01.07.2013 ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-5.
முதன்மைச் செயலாளர்/ஆணையர், வருவாய்த்துறை, சென்னை-5.
கல்லூரி கல்வி இயக்குநர், சென்னை-6.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101.
கல்லூரி கல்வி இயக்குநர், சென்னை-6.
தொழிற்கல்வி இயக்குநர், சென்னை-25.
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை-10.
சட்டக்கல்வி இயக்குநர், சென்னை-101.
பதிவாளர், தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம், கோவை.
பதிவாளர், டாக்டர் எம்.ஜி.ஆர் பல்கலைக் கழகம், சென்னை-32
பதிவாளர், அண்ணாமலை பல்கலைக் கழகம், சிதம்பரம்.
பதிவாளர், இதர அனைத்து பல்கலைக் கழகங்கள்
இயக்குநர், பள்ளிக்கல்வித்துறை, கல்லூரி சாலை, சென்னை-6.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்/ மாவட்ட ஆதி.(ம)ப.ந அலுவலர்கள்/ மாவட்ட கருவூல அலுவலர்கள்.

மாநிலக் கணக்காய்வு தலைவர், சென்னை-6/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-8/35/6.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
நகல்:-
நிதித் (ஆதி(ம)ப.ந / வசெ பொது-II) துறை, சென்னை-9.
அனைத்துத் துறைகள், தலைமைச் செயலகம், சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம்,சென்னை-9.
மாண்புமிகு ஆதிதிராவிட நல அமைச்சரின்நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் செயலாளரின்
நேர்முக உதவியாளர், சென்னை-9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்
அனைத்துப் பிரிவுகள், சென்னை-9.
இருப்புக் கோப்பு/உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

4/7/13
பிரிவு அலுவலர்.
4/07/2013